THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. The School Health Committee visited this State in September 1960, and had discussions with the concerned officers. Its report is awaited.

SRI A. VEDARATHNAM : அந்தக் கமிட்டி உறுப்பினர்கள் யார் ? நம் அரசாங்கத்தில் ஆலோசித்த முக்கியமான விஷயங்கள் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தக் கமிட்டிக்கு தலைவி ஸ்ரீமதி ரேணுகா ரே, எம். பி. எதற்காக வந்தார்கள் என்ருல் to have a comprehensive school health programme and to devise an effective school medical service இப்போது இண்டெரிம் ரிபோர்ட் கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஃபைனல் ரிபோர்ட் இன்னும் அனுப்பப்படவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், 25 வருஷத்திற்கு முன்னுலே வெள்ளையன் ஆட்சி இருந்தபோது தான் பள்ளி மாணவர்களுக்கு வைத்தியப் பரிசோதனை நடத்தப்பட்டது. ஆகவே உடனடியாக மாணவர்களுக்கு வைத்தியப் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர் முதலில் Preamble ளோடு தான் எப்போதும் பேசுவார். அந்த மாதிரி பேசுவதை ஒத்துக் கொள்ளவில்லை. ரிபோர்ட் வந்த பிறகு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யலாம்.

SRI K. VINAYAKAM : At present school children are only inspected by medical officers but the report only is given to the school children. No treatment of any kind is given by the institution. Will the Government take any steps to see that medical treatment is also given in these cases which deserve such medical treatment?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, all these questions will be gone into after the submission of the report. Even with regard to medical examination of children, it is not as regular as it was before. That must be done and also mere examination of children won't do. We will have to take steps to improve their health.

SRI A. VEDARATHNAM: இந்தக் கமிட்டியின் அறிக்கையை எதிர்பார்க்காமல் இப்போது ஹாஸ்டல்களில் தங்கியிருக்கிற, மற்றும் அனுதை விடுதிகள் போன்ற ஸ்தாபனங்களில் தங்கியிருக்கிற மாணவர்களுக்கு மெடிக்கல் டெஸ்ட் ஆண்டுதோறும் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிறது. இண்டரிம் ரிபோர்ட் அனுப்பிவிட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் ஃபைனல் ரிபோர்ட் வந்து விடும். கொஞ்சம் நிதானித்து அதையும் பார்த்து ஒரு வழியாக அதற்கு நடவடிக்கை எடுப்பது தான் உசிதம்.

Residents of Kanniyappa Nagar (eviction)

• 1201 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any memorandum from Kanniappa Nagar Kudisai Valvor Nala Urimai Kuzhu, Madras, on 24th January 1961 regarding the eviction of the residents to Kodambakkam (Pudur);

(*b*) if so, the action taken thereon; and

(*c*) whether there is any proposal to accommodate the above residents in flats?

30th March 1961]

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) & (b) A petition from the Kanniappa Nagar Kudisai Valvor Nala Urimai Kuzhu, Madras, dated 30th January 1961, was received by the Government in the Industries, Labour an Co-operation Department and was forwarded to the Collector of Madras for necessary action.

(c) No, Sir.

Sri K. VINAYAKAM : In the meanwhile did this " Kanniappa Nagar Kudisai Valvor Sangham " go to the Court to obtain orders from their being evicted to Kodambakkam-Pudur?

The Hon. Sri M. A. MANICKAVELU : That is right. One of the residents filed a writ petition and it is pending in the High Court.

Chemical fertilizers

*1192 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பண்டகசாலையில் (Central Store) இரசாயன உரத்தில் சிமெண்ட் கலந்து விற்றதாக வந்த புகாரின்மீது பரிசோதனைக்கு கிண்டிக்கு அனுப்பியதன் முடிவு தெரிந்து விட்டதா ?

(ஆ) அப்படியானல் அதன் விவரமென்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) There have been no complaints regarding the mixing of cement with the chemical fertilizers by the North Arcot District Central Co-operative Stores and no such cases against the Co-operative Stores are pending.

(b) Does not arise.

Sri V. SUBBIAH : இந்த அம்மோனியம் ஸல்ஃபேட்டிலே நாம் சாப்பிடக்கூடிய உப்பைக் கலந்தால், உப்புக்கும் அம்மோனியம் ஸல்ஃபேட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை கிண்டியில் கண்டுபிடித்திருக்கிருர்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முன்பு ஒரு புகார் அந்த மாதிரி வந்தது. அது பரிசீலனை செய்யப்பட்டது. விளைவு என்ன என்று இப்போது நினைவில் இல்லை. அதைப் பற்றிய புள்ளிவிவரம் இல்லை. இந்தக் கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தில் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் சிமெண்ட் கலந்தது என்பதைப் பற்றியது.

Reservoir across Vellar

* 1193 *Q.*—Sri V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether the proposal of building a reservoir across the Vellar at Gudalore in Tirumayam taluk, Tiruchirappalli district, will be included in the Third Five-Year Plan?

The Hon. Sri P. KAKKAN : The schemes to be taken up rduring the Third Five-Year Plan have not been finalized.